DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **O.S :100/2025** | |
| Deposition of Witness | | | : | **வா.சா. 5** | |
| Name | : | திரு. சண்முகம் | Occupation | : | டவுன் சர்வேயர் கும்பகோணம் மாநகராட்சி |
| Father's Name/ Husband | : | மாது | | | |
| Village | : | | Age | : | 37 |
| Taluk | : | கும்பகோணம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 23-09-2025

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் , இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். கும்பகோணம் மாநகராட்சியில் டவுன் சர்வேயராக வேலை பார்க்கிறேன் . அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். கும்பகோணம் டவுன் சர்வே நம்பர் 1073 சம்மந்தமாக டவுன் சர்வே ரிஜிஸ்டர் கொண்டு வந்திருக்கிறேன். இந்த சர்வே நம்பர் 1073 ரையத்து மனை, 527 சதுர மீட்டர். கூரை வீடு . பஞ்சநாத படையாச்சி மகள் மங்கலம் பெயரில் இருந்து செல்லன் குமாரர் கன்னையன் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாற மாறிய நாள் 12.05.2014. அந்த அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட பதிவேட்டு நகல் **சா.சா.ஆ. 1 ஆகும்**.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க ஆணையர் எனக்கு கடிதம் எதையும் கொடுக்கவில்லை. ஆணையரிடம் இந்த ஆவணத்தை காண்பித்து ஒப்புதல் பெற்று கொண்டுவரவில்லை . ஆணையரின் கையொப்பமும் பெறவில்லை . நான் தாக்கல் செய்துள்ள எக்ஸ் –1 ஆவணம் இந்த TSLR பதிவேடு 2002 இல் பதிவு செய்யப்பட்டது . 2002 க்கு முன்பு உள்ள பதிவுகள் சம்மந்தமாக ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ளது . இந்த ஆவணத்தை பார்த்தால் தான் இந்த

2002 பதிவிற்கு முன் யார் பெயரில் இருந்தது என்பது தெரியவரும் என்றால் சரி. ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் கூரை வீடு என்று சொல்கிறேன். நான் நேரில் போய் பார்க்கவில்லை. 2014 இல் பெயர் மாற்றம் செய்த விவரம் எங்கள் அலுவலகத்தில் இருக்காது. ஆணையர் 02/08/2017 இல் தான் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரி. 2014 இல் செய்த பெயர் மாற்றம் குறித்து ஆணையர் 2017 இல் தான் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் TSLR ஆவணத்தில் புல எண் 1073 ஆகும். 32 என்பது கதவு எண் ஆகும்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.